/ மின்னஞ்சலில் /

# நாமக்கல் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.மு.எண்.1331/ஆ4/2021 நாள்.30 .03.2021

பொருள் : தமிழ்நாடு அமைச்சுப் பணி – பள்ளிக் கல்வித் துறை – உதவியாளர் நேரடி நியமனம் – (Group IIA Services) (Non-Interview posts) – 2014–2015 மற்றும் 2015–2016ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தற்காலிக அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட உதவியாளருக்குப் பணிவரன்முறை செய்து ஆணை பெறப்பட்டது அனுப்புதல் – சார்பு.

பார்வை : சென்னை–6 தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகள் ந.மு.எண்.14362/அ4/இ3 /2021, நாள்.22.03.2021.

---------

பார்வையில் காணும் செயல்முறைகளின்படி, நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கீழ்காணும் உதவியாளருக்குப் பணிவரன்முறை செய்து ஆணை பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியாளர் பெயர்/ பதவி | பணிபுரியும் அலுவலகம் | உதவியாளர் பணியிடத்தில் பணிவரன்முறை செய்த நாள் |
|---|---|---|---|
| 1. | செல்வி.ச.அட்ச்சயா, உதவியாளர். | மாவட்டக் கல்வி அலுவலகம், நாமக்கல். | 06.02.2017 முற்பகல் |

பெறப்பட்ட பணிவரன்முறை ஆணை சம்பந்தப்பட்ட பணியாளருக்கு சார்பு செய்யும் பொருட்டு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

இணைப்பு:
பார்வையில் காணும் பணிவரன்முறை
ஆணை நகல்

முதன்மைக் கல்வி அலுவலர்,
நாமக்கல்.

பெறுநர்: சம்பந்தப்பட்ட பணியாளர் (உரிய வழியாக)

நகல் : மாவட்டக் கல்வி அலுவலர், நாமக்கல்.

// மின்னஞ்சலில் //

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள்,
சென்னை-600 006,
ந.மு.எண்.14362/அ4/இ3/2021, நாள். 22.03.2021.

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி - பள்ளிக் கல்வித்துறை - உதவியாளர் நேரடி நியமனம் - (Group-II A Services) (Non - Interview posts) - 2014-2015 மற்றும் 2015-2016ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தற்காலிக அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட உதவியாளர்களுக்குப் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - சார்பு

பார்வை:

1. அரசாணை (4டி) எண்.18, பள்ளிக் கல்வித்[ப.க. 4(2)] துறை, நாள்.28.10.2013.
2. அரசாணை (4டி) எண்.353, பள்ளிக் கல்வித்[ப.க. 4(2)] துறை, நாள். 17.12.2013.
3. அரசாணை (நிலை) எண்.34, பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் (பி) துறை, நாள்.15.04.2015.
4. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-3, கடிதம் ந.க.எண். 7208/PSD RF-1/2016, நாள். 08.01.2017 மற்றும் 07.06.2017
5. சென்னை-6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண். 4744/அ4/இ3/2017, நாள். 04.02.2017 மற்றும் 18.08.2017.
6. சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் கருத்துருக்கள்.

2014-2015 மற்றும் 2015-2016 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் உதவியாளர் பதவிக்கு நேரடி நியமனம் மூலம் (Group-II A Services) (Non -Interview posts) தற்காலிக அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு பார்வை (04)ல் கண்ட செயல்முறைகள் மூலம் பள்ளிக் கல்வித்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை (5)ன் அடிப்படையில் ஆணை வழங்கப்பட்டது.

அவ்வாறு தமிழ்நாடு அமைச்சுப்பணியில் வகை 12-ன் கீழ் உள்ள உதவியாளர் பணியிடத்தில் தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்ட கீழ்க்காணும் பணியாளர்களுக்கு பணிவரன்முறை செய்யக் கோரி பார்வை (6)ன் வாயிலாக உரிய கருத்துருக்கள் சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர்களின் பரிந்துரையுடன் வரப்பெற்றுள்ளன. அதனடிப்படையில் கீழ்க்காணும் உதவியாளர்களுக்கு அவர்களது பெயருக்கெதிரில் கலம் (4)ல் குறிப்பிட்டுள்ள நாளில் தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்)சட்டம் 2016 உட்பிரிவு 28-ன்படி பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ. எண். | பெயர் / பதவி (திரு. / திருமதி. / செல்வி) | பணிபுரியும் அலுவலகம் / பள்ளி | உதவியாளர் பணியிடத்தில் பணிவரன்முறைபடுத்தும் நாள் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | க.முனிராஜன், உதவியாளர் | அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, காரிமங்கலம். தருமபுரி மாவட்டம். | 06.02.2017 முற்பகல் |
| 2 | ப.அசோகன், உதவியாளர் | வட்டாரக் கல்வி அலுவலகம், வல்லம். விழுப்புரம் மாவட்டம். | 06.02.2017 முற்பகல் |
| 3 | அ.உலகநாதன், உதவியாளர் | வட்டாரக் கல்வி அலுவலகம், பல்லடம். திருப்பூர் மாவட்டம். | 10.02.2017 முற்பகல் |
| 4 | க.அருள், உதவியாளர் | கே.எஸ்.சி.அரசு மேல்நிலைப் பள்ளி, திருப்பூர். திருப்பூர் மாவட்டம். | 06.02.2017 முற்பகல் |
| 5 | செ.சந்திரசேகர், உதவியாளர் | மாவட்டக் கல்வி அலுவலகம். திருப்பூர். திருப்பூர் மாவட்டம். | 06.02.2017 முற்பகல் |
| 6 | ச.அட்சயா, உதவியாளர் | மாவட்டக் கல்வி அலுவலகம். நாமக்கல். நாமக்கல் மாவட்டம். | 06.02.2017 முற்பகல் |

மேற்படி (06) பணியாளர்களுக்கு உதவியாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்ட ஆண்டு / தர எண் அடிப்படையில் முன்னுரிமை அமையும் என்று தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட பணிவரன்முறை குறித்து எழும் ஐயப்பாடுகளை உடனடியாக நியமன அலுவலரின் கவனத்திற்கு சம்பந்தப்பட்ட அலுவலர் கொண்டு வர வேண்டும்.

இந்தப் பணிவரன்முறையானது, பார்வை (4) ல் குறிப்பிட்டுள்ள தேர்வாணையக் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, நிலுவையிலுள்ள நீதிமன்ற வழக்கின் தீர்ப்புக்கு உட்பட்டதாகும்.

சம்பந்தப்பட்ட அலுவலகத் தலைவர் இந்தச் செயல்முறைகளை உடனடியாக மேற்படி உரிய நபருக்கு அளிக்க வேண்டும். பணியாளர் வேறு அலுவலகத்திற்கு மாறுதல் செய்யப்பட்டிருப்பின் அவ்வலுவலகத்திற்கு இச்செயல்முறைகளை அனுப்ப வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி)

பெறுநர்: சம்பந்தப்பட்ட பணியாளர் (உரிய அலுவலர் வாயிலாக).

நகல்: சம்பந்தப்பட்ட அலுவலர் / தலைமையாசிரியர்.

நகல்: சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர்.

மே.எ.ந.க.எண் : 1331 /அ4/ 2021 நாள்: 30.03.2021
நகல் சார்பு செய்யப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்,
நாமக்கல்.

பெறுநர்: சம்பந்தப்பட்ட பணியாளர் (உரிய வழியாக)
நகல்: மாவட்டக் கல்வி அலுவலர், நாமக்கல்